2026 Issue #02

# சிம்பியோன் சமூக செய்திமடல்

இந்த மாதத்தில், சிம்பியோன் நிறுவனம் விவசாயம் மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய இரண்டிலும் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. எமது மாவடிவேம்புப் பண்ணையில் 15,000 நாற்றுகள் என்ற இலக்கை அடைந்தது முதல், மட்டக்களப்பு சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் விவசாயத் தயாரிப்புகள் மற்றும் பெண்களால் உருவாக்கப்பட்ட கைவினைப் பொருட்களை வெற்றிகரமாகக் காட்சிப்படுத்தியது வரை, எமது பிராந்திய ரீதியிலான பங்களிப்பு விரிவடைந்து வருகின்றது. அதேவேளை, எமது சனிக்கிழமை வகுப்புகளில் சதுரங்கம் (Chess) மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) பயிற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம், அடுத்த தலைமுறையினரை உருவாக்குவதில் எமக்குள்ள அர்ப்பணிப்பு முன்பை விட வலிமையாக இருப்பதை இது நிரூபிக்கின்றது.







COMMUNITY UPDATES

## மாவடிவேம்புப் பண்ணை நிலவரம்: பசுமைப் புரட்சியின் அடுத்த கட்டம்

எமது புதிய பராமரிப்பாளரின் (Caretaker) வருகையுடன், மாவடிவேம்பு பண்ணை தற்போது புத்துயிர் பெற்றுள்ளது.

- **நாற்று உற்பத்தி:** குறுகிய காலத்திற்குள் 15,000 நாற்றுகளை நாம் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளோம். இதில் கத்தரி, மிளகாய், தக்காளி மற்றும் கொச்சி ஆகியன அடங்கும்.
- **இயற்கை உரங்கள்:** மண்ணின் வளத்தை அதிகரிக்க மீன் அமினோ அமிலம் (Fish Amino Acid) மற்றும் மண்புழுப் பசளை (Vermicompost) தயாரிப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இவை விரைவில் எமது பயிர்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.
- **பயிர்ச் செய்கை:** தற்போது பயிர்ச் செய்கை காலம் என்பதால், வெண்டிக்காய் நடுகை செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய பயிர்களும் விரைவில் நடுகை செய்யப்படவுள்ளன.





076 - 4495536

info@symbioun.lk

FR. MARIYANAYAGAM GIRLS' HOME MAIN STREET, RDS ROAD. MAVADIVEMBU

# மட்டக்களப்பு சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2026: பெரும் வெற்றி!

கடந்த பெப்ரவரி 13, 14, மற்றும் 15 ஆகிய திகதிகளில் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் சிம்பியோன் பங்குபற்றியது. பெண் தொழில்முயற்சியாளர் சம்மேளனத்தின் (Chamber of Women's Economy) அனுசரணையுடன் எமக்கென ஒரு பிரத்யேக விற்பனை அரங்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

- **அங்கீகாரம்:** எமது மரக்கன்றுகள், நாற்றுகள், விவசாய வழிகாட்டிப் புத்தகங்கள் மற்றும் மண்புழுப் பசளை ஆகியவற்றைக் காண மற்றும் கொள்வனவு செய்ய மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை என கிழக்கின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இயற்கை விவசாய ஆர்வலர்கள் வருகை தந்தனர்.

- **கைவினைத்திறன்:** மட்டு பெண்களின் கைவினைத் தயாரிப்புக் குழுவும் (Batti Women's Crafting Team) தமது படைப்புகளைக் காட்சிப்படுத்தி விற்பனை ஈட்டியதுடன், பெண் தலைமைத்துவக் கைவினைப் பிரிவாகப் பலரது கவனத்தையும் ஈர்த்தது.

இந்த வாய்ப்பினை வழங்கிய பெண் தொழில்முயற்சியாளர் சம்மேளனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.












076 - 4495536 info@symbioun.lk FR. MARIYANAYAGAM GIRLS' HOME MAIN STREET, RDS ROAD. MAVADIVEMBU

## சனிக்கிழமை வகுப்புகள்: அறிவு மற்றும் திறன் மேம்பாடு

எமது சனிக்கிழமை கல்வித் திட்டங்கள் வழமை போல உற்சாகத்துடன் நடைபெற்று வருகின்றன.

- **கொண்டாட்டங்கள்:** கடந்த பிப்ரவரி 7ஆம் திகதி, திருமதி. ஜனெட் ஜோசப் அவர்களின் பிறந்தநாள், திரு. லேனார்ட்  ஜோசப், மற்றும் திருமதி. ருவனி குணவர்தன ஆகியோரின் திருமண நாள் மற்றும் கமலேந்திரனின் பிறந்தநாள் ஆகிய விசேட நிகழ்வுகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டன. SEF தலைவி திருமதி. ஜோசப் அவர்களின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிழ்வில், சிறுவர்களுக்கு விசேட உணவுகள் வழங்கப்பட்டன. திரு. இராசையா ராஜேஸ்வரன் அவர்களின் பிறந்த நாள்  பிப்ரவரி 20ஆம் திகதி கேக் வெட்டப்பட்டு விசேட உணவும் வழங்கி கொண்டாடப்பட்டது.
- **புதிய முயற்சிகள்:** பெப்ரவரி 21 முதல் திரு. கிருத்திகன் அவர்களின் பயிற்சியின் கீழ் சதுரங்க (Chess) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- **முன்னேற்றம்:** எமது தகவல் தொழில்நுட்ப (IT) வகுப்புகளில் மாணவர்கள் மிகச்சிறந்த முன்னேற்றத்தைக் காட்டி வருகின்றனர். ஆரம்ப அடிப்படை அறிவே இல்லாதிருந்த மாணவர்கள் இப்போது கணினியைத் திறம்படக் கையாளக் கற்று வருகின்றனர்.
- **கராத்தே பயிற்சி:** எதிர்வரும் தரம் உயர்வுப் பரீட்சைக்காக (Grading) கராத்தே மாணவர்கள் வார இறுதி மற்றும் வார நாட்களிலும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.












## அடுத்த கட்டம்:

எமது மாணவர்கள் மற்றும் விவசாயிகளின் இந்த வளர்ச்சிப் பயணத்தில் நீங்களும் ஒரு அங்கமாக இருக்க விரும்புகிறீர்களா? எமது இயற்கை உரங்கள் அல்லது கைவினைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்!

**சிம்பியோன் - சமூக மாற்றத்திற்கான ஒரு கூட்டு முயற்சி!**



**இந்த திட்டத்தை செயல்படுத்த உதவிய சமூகத்தினர் மற்றும் எமது குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவிற்கு நாங்கள் நன்றி நவில்கிறோம்.**

**எமது செயல்பாடுகளைப் பற்றி மேலும் அறிய, கீழே உள்ள இணைப்புகளில் எம்மைப் பின்தொடரவும்:**


076 - 4495536

info@symbioun.lk

FR. MARIYANAYAGAM GIRLS' HOME MAIN STREET, RDS ROAD. MAVADIVEMBU